
மின்னிதழ் E-paper
# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
20.06.2020 சனிக்கிழமை

## இலங்கையில் இருந்து பயணித்த இந்திய மாலுமிக்குக் கொரோனா!



கொழும்பு, ஜூன் 20

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானார் என அடையாளம் காணப்பட்ட பயணி ஒருவர் நேற்று அதிகாலை கட்டாரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

02

# போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்தும் இராணுவ வலயமாக வடக்கு - கிழக்கு

## ஐ.நா. அறிக்கையாளர் குற்றச்சாட்டு



ஜெனிவா, ஜூன் 20

யுத்தம் முடிவடைந்து 10 ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் கூட இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் தீவிர இராணுவ மயமாக்கப்பட்டுள்ளதாகவும், கண்காணிப்புக்கள் தீவிரமாக்கப்பட்டுள்ளதாகவும் ஐ.நா. விசேட அறிக்கையாளர் கிளெமென்ட் நைலெட்சோசி வோல் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பித்துள்ள 2019 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பேரவையின் 44 ஆவது அமர்வில் சமர்ப்பித்த இலங்கை

02

## படகுடன் சிக்கிய கஞ்சா!





யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணம்- கற்கட தீவில் 58 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

கற்கடதீவில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்

02

## டிப்பரை மோதிவிட்டு தப்பியோடினார் சாரதி!



கிளிநொச்சி, ஜூன் 20

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற டிப்பர் வாகனம் நேற்று அதிகாலை ஆனையிறவுப் பகுதியில் வேக கட்டுப்பாட்டை

02

# யாழ்ப்பாண கல்வி நிலை கவலைக்கிடம்!

## வடக்கு ஆளுநர் வேதனை



யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்.மாவட்டத்தின் கல்வி நிலைமை மிகக் கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ். எம்.சார்ள்ஸ், எமது சமுதாயத்தின் எதிர்காலம் சூன்யமயமாகி விடக்கூடாது என்பதை மனதில் நிறுத்தி அதிபர், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

02

## வவுனியா முகாமில் 10 பேருக்கு தொற்று

வவுனியா, ஜூன் 20

டுபாயில் இருந்து நாடு திரும்பி, வவுனியா - வேலங்குளம் தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 10 பேருக்கு, கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன் தினம் நாடு திரும்பிய 168 பேர் வவுனியா- வேலங்குளம் தனிமைப்

02

## யாழ். புலனாய்வு அலுவலர் கல்முனையில் தற்கொலை

### கைத் துப்பாக்கியால் சுட்டு



அம்பாறை, ஜூன் 20

அரச புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவர் கடமை அறையில் துப்பாக்கி

02

## அரசு பக்கம் தாவுவோரின் தாடைகளை உடைப்பேன்!

### மேர்வின் சில்வா மிரட்டல்



கொழும்பு, ஜூன் 20

முன்னாள் பிரதமர் ரணில் எப்போதும் ராஜபக்ஷவினருடன் உடன்பாடுகள் ஏற்படுத்திய நபர் அல்லர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான மேர்வின் சில்வா

02

## வாள்வெட்டுக்கு சென்றவர்கள் சிக்கினர் இராணுவத்தினரிடம்!



யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணம்-நாயன்மார்கட்டுப் பகுதியில் நேற்று மாலை வாள்வெட்டுக்குச் சென்றவர்கள் இராணுவத்தினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

அந்தப் பகுதியால் 7 மோட்டார் சைக்கிளில் வந்தவர்களை

02

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 1,950 | 03 | 493 | 43 | 1,446 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

## போர் முடிந்து...

தொடர்பாக சமர்ப்பித்த அறிக்கையி லேயே அமைதியாக ஒன்று கூடுவதற் கான உரிமை தொடர்பான ஐக்கிய நாடுகளின் சிறப்பு அறிக்கையாளர் கிளெமென்ற் நயாலெட்சோசி வோல் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

2019 ஏப்ரலில் நடந்த ஈஸ்டர் குண்டுவெடிப்புத் தாக்குதல்களைத் தொடர்ந்து நாடு முழுவதும் இந்த கண் காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

2019 ஜூலை 18 முதல் 26 வரை இலங்கைக்கு விஜயம் நிலைமைகளை ஆராய்ந்ததன் அடிப்படையில் இந்த அறிக்கையை ஐ.நா. விசேட அறிக்கையாளர் தயாரித்துள்ளார்.

தனது இலங்கை விஜயத்தின்போது தாங்கள் தீவிரமாகக் கண்காணிக்கப் படுவது குறித்து சிவில் சமூகப் பிரதிநிதி கள் வெளிப்படுத்திய கருத்துக்கள் மற்றும் சமூக ஊடகங்களில் தீவிர கண்காணிப்புக்கள் குறித்து தான் தீவிர கரிசனை கொண்டுள்ளதாகவும் கிளெமென்ற் நயாலெட்சோசி வோல் குறிப்பிட்டுள்ளார்.

"கிட்டத்தட்ட எல்லா நிறுவனங் களும் கண்காணிப்புக்கு உட்பட்டு வருகின்றன. அவர்கள் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களைப் பொறுத்து கண்காணிப்புக்கள் தீவிரத் தன்மை வேறுபடுகின்றது.

தொலைபேசி அழைப்புகளைக் கண்காணித்தல், வீடு அல்லது அலுவலகத் துக்குப் பின்தொடர்தல், உளவுத்துறை கள் ஊடாக ஒளிப்பதிவுகளைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற வகையிலும் கண்காணிப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் படைத் தரப்பினர் மற்றும் உளவுத் துறையினரால் தீவிரமாகக் கண் காணிக்கப்படுகின்றனர். இவ்வாறான போராட்டங்களில் பங்கேற்போர் போராட்டங்களுக்கு முன்பும் பின்பும் அது குறித்து விசாரிக்கப்படுவதுடன், அச்சுறுத்தலுக்கு ஆளாகின்றனர்" எனவும் ஐ.நா. விசேட அறிக்கையாளர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படையினர் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை உள்ளிட்ட உளவுத்துறை அதிகாரிகள் அடிக்கடி தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக் குள் நுழைவது, கேள்விகளை எழுப்பி அவற்றின் உறுப்பினர்களைச் அச்சுறுத் தும் போக்கில் நடந்துகொள்வது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் அலுவலகத்துக்கு இரு மாதங்களுக்குள் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் 6 தடவைகள் விஜயம் செய்து விசாரித்துள்ளனர் எனவும் தனது அவதானிப்பு மற்றும் இலங்கையில் பேசியவர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அவர் தெரிவித்துள்ளார்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நிகழ்வுகளை நடத்துவதற்கு முன்பு பாதுகாப்புப் படையினருக்கும் உளவுத்துறையினருக்கும் அது குறித்து தகவல் அளிக்கவேண்டும் என நிர்ப்பந்திக்கப்படுவது குறித்தும் ஐ.நா. விசேட அறிக்கையாளர் கவலை வெளியிட்டுள்ளார்.

தான் மேற்கொண்ட ஒரு சந்திப்பின் போது சிவில் உடையில் உளவுத்துறை யைச் சேர்ந்த ஒருவர் பிரசன்னமாகியி ருப்பது குறித்து சிவில் சமூகப் பிரதிநிதி ஒருவர் தன்னை உசார்ப்படுத்தியதாக வும் சந்திப்பு நடைபெற்ற இடத்துக்கு வெளியே அந்தச் சந்திப்பில் பங்கேற்ற வர்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்ட னர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மற்றொரு இடத்தில் தான் பயணம் செய்த வாகனத்தின் இலக்கத்தை இராணு வத்தினர் அவதானித்துப் பதிவு செய்ததை கவனித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

அச்சுறுத்தலான ஒரு சூழலை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டே இவ்வாறான கண் காணிப்புக்கள் இடம்பெறுகின்றன.

மேலும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமைப்புக்களுடனான தொடர்புகளைப் பேணும் சிவில் சமூக உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களைப் பழிவாங்கும் செயற்பாடாகவும் கண்காணிப்புக்கள் கருதப்படலாம் என்று அவர் கூறினார்.

சிவில் சமூகப் பிரதிநிதிகள், அமைதி யான போராட்டங்களில் பங்கேற்பவர் கள் மற்றும் ஏனைய தரப்பினர் கண் காணிக்கப்படுவது, அச்சுறுத்தப்படுவது தொடர்பில் கிடைத்த அறிக்கைகள் கவலை அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல்கள் அவநம்பிக்கை மற்றும் அச்சமான சூழலை உருவாக்குகிறது. இது சுய தணிக்கைக்கு வழிவகுக்கிறது எனவும் ஐ.நா. விசேட அறிக்கையாளர் க்ளெமென்ட் நைலெட்சோசி வோல் மனித உரிமைகள் பேரவை 44 ஆவது அமர்வில் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில்...

அவ்வாறு திருப்பி அனுப்பப் பட்டவர் இந்திய மாலுமி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17ஆம் திகதி இந்தியாவில் இருந்து இலங்கைக்கு மாலுமிகள் உட்பட 65 பேர் வருகை தந்துள்ளனர். அவர்கள் அனைவரும் கப்பல்களில் சேவை செய்பவர்களாவர். அவர்களில் 15 பேர் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாகக் கட்டாருக்குச் சென்றுள்ளனர்.

அவ்வாறு சென்ற 15 பேரில் ஒருவருக் குக் கொரோனா தொற்றியுள்ளமை டோஹாவில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதியாகியுள்ளது. அதற்கமைய அவர் அந்த நாட்டுக்குச் சென்ற விமானத்திலேயே இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

அவ்வாறு வந்த இந்திய மாலுமி கொழும்பு தேசிய தொற்றுநோய் தடுப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## அரசு பக்கம்...

தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரசுக்குச் செல்லும் எவராக இருந்தா லும் அவர்களின் தாடைகளை உடைப் பேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

பொதுத் தேர்தலின் பின்னர் ஐக் கிய தேசியக் கட்சி அரசுடன் இணை வது தொடர்பாக ராஜபக்ஷவினருக் கும், ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடை யில் உடன்பாடு ஏற்படுத்திக் கொள்ளப் போவதாகப் பரவி வரும் வதந்தி சம்பந்தமாகக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் தன்னை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்து அனுப்பினால், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரசுக்குச் செல்லும் எவராக இருந்தாலும் அவர்களின் தாடைகளை உடைக்கப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேர்வின் சில்வா எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அனுராதபுரம் மாவட்டத்தில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா...

படுத்தல் முகாமுக்கு கொண்டு வரப் பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில், நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், பரிசோதனை முடிவுகள் நேற்று முன் தினம் இரவு கிடைத்துள்ளன.

இதன்படி, கர்ப்பிணி ஒருவர் உள் ளிட்ட 10 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து கர்ப்பிணிப் பெண், முல்லேரியா கொரோனா தடுப்பு சிகிச்சை நிலையத்திற்கும், ஏனைய 9 பேரும், காத்தான்குடி கொரோனா தடுப்பு சிகிச்சை நிலையத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று செய்திகள் கூறுகின்றன.

## யாழ்ப்பாண...

வடக்கு மாகாண ஆளுநர் தலைமை யில், யாழ். மாவட்டத்திற்குட்பட்ட தீவகம், யாழ்ப்பாணம், தென்மராட்சி மற்றும் வடமராட்சி கல்வி வலயங்களு டனான கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்கள் நேற்று முன் தினம் வியாழக்கிழமை யாழ்.மாநகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் காலை 9:15மணி தொடக்கம் மாலை 5மணி வரை ஒவ்வொரு வலயத்துக்கும் தனித்தனியாக இடம்பெற்றிருந்தன.

வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் மற்றும் உதவிச்செயலாளர், மாகாணக் கல்வித் திணைக்கள மேலதி கப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பா ளர்கள் மற்றும் உதவிக் கல்விப் பணிப் பாளர்கள், பாடசாலை அதிபர்கள், மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது ஒவ்வொரு வலயங்களின் கல்வி செயற்பாடுகள் தொடர்பான காட்சி அளிக்கைகளை பார்வையிட்டுக் கல்வி அபிவிருத்திக்கான அதிபர்களின் செயற் பாட்டுத் திட்டங்கள் மற்றும் கருத்துக் களை ஆளுநர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது ஆளுநர் தெரிவிக்கையில்-

நமது மாகாணக் கல்வி வீழ்ச்சிக்கு யுத்தம் நிமித்தமான இடப்பெயர்வுகள், சமூகப் பொருளாதார இடர்பாடுகள், போக்குவரத்துப் பிரச்சினைகள், முறையான வளப்பகிர்வின்மை போன்ற காரணங்கள் இருக்கின்றனவாக உணர்கின்றேன்.

வியாபாரத்திலும் கல்வியிலும் முன்னோடிகளாக நின்றவர்கள் தீவக மக்கள். அந்நிலையை மீண்டும் நாம் கொண்டுவர வேண்டும். பிரச்சினைகளைத் தள்ளி வைத்து மீண்டும் உரமேற்றி அந்த மக்களை முன்னேற்ற ஆசிரிய சமூகம் ஒத்துழைக்க வேண்டும். வறுமை நிலையிலுள்ள குடும்பங்களைக் கண்டறிந்து அவர்கள் வாழ்வாதாரத்தை முன்னேற்ற பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் உதவ வேண்டும்.

மாணவர்கள் கல்வியை இடைநிறுத்துவதற்கான காரணங்களை இனங்கண்டு மீண்டும் அவர்களைப் பாடசாலைக்கு அழைத்து வந்து கல்வி பயில வைக்க வேண்டும். ஏனென்றால், இவர்கள்தான் ஏனைய மாணவர்களை சீரழிப்பதோடு மட்டுமல்லாமல் சமூகக் குற்றங்களில் ஈடுபட்டுச் சமுதாயத்தை யும் சீரழிக்கிறார்கள். பிள்ளைகளின் உளநிலையைப் பெற்றோர்களும் ஆசிரி யர்களும் அறியாமல் இருப்பதால்தான் அவர்கள் ஆர்வம் குறைந்து கல்வியை இடைநிறுத்தம் செய்கின்றார்கள்.

நமது சமுதாயத்தின் எதிர்காலம் சூனியமாக மாறிவிடக்கூடாதென்பதற் காக கல்விச் சமூகம் மிகவும் பொறுப் போடு செயல்படவேண்டும். தனிப் பட்ட நலன்களை விடுத்து அர்ப்பணிப் புடன் பிரச்சினைகளைக் களைந்து மாணவ சமூகத்திற்காக ஆசிரிய சமூகம் பாடுபடவேண்டும். அவ்வாறு செயற்படுகின்றபோது, நமது சமூகம் நிச்சயம் வளர்ச்சியடையுமென்பதை நான் நம்புகின்றேன்.

ஒரு காலத்தில் கல்வியென்றால் நமது நாட்டில் மட்டுமல்ல ஏனைய நாடுகளுக்கும் முதலில் நினைவிற்கு வருவது யாழ்ப்பாணம் தான். அந் தப் பெருமையை இந்த மண் இழந்து கொண்டிருக்கிறது. முன்னிலையி லிருக்கின்ற யாழ்ப்பாணக் கல்விவலயம் ஏனைய கல்வி வலயங்களையும் முன்னேற்றுவதற்கு உதவவேண்டும்.

சமூக ஒழுக்கத்தை இளைய சமு தாயத்திடம் கட்டியெழுப்ப வேண்டும். பாடசாலைகளின் உட்கட்டமைப்புத் தேவைகளை இனங்கண்டு முழு அறிக்கையொன்றை கல்வி அமைச்சினூ டாக சமர்பித்தால் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுசென்று உரிய உதவிகளைப் பெற்றுத்தர முயற்சிக்கின்றேன்.

யுத்த காலகட்டத்தில் கூட நமது மாணவர்கள் நன்றாகப் படித்தார்கள். யாழ்ப்பாணம் கல்வியின் தலையென் றும் வடமராட்சியும் தென்மராட்சியும் மூளையென்றும் ஒரு காலத்தில் சொல் வார்கள். ஆனால் அதன் இன்றைய நிலை கவலைக்கிடமாகவுள்ளது. அரச வேலைக்குத் தகுதியான பட்டதாரிகள் உருவாக்கப்படவில்லை. பட்டதாரிகள் படித்த துறையில் அரச வேலைகளில்லை. இதற்குக் காரணம் கல்வித்துறை தகுந்த பாடரீதியான வல்லுநர்களை உருவாக்கத் தவறியமையே ஆகும்.

கல்வியின் தரத்தை உயர்த்த வேண் டும். கல்வி இடைவிலகலை மட்டுப்படுத்த வேண்டும். பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெறும் மாணவர்கள் எண்ணிக் கையை உயர்த்தவேண்டும். அவர்கள் விஞ்ஞானம், மருத்துவம் மற்றும் பொறியியல் போன்ற பாடங்களைப் படிக்க வேண்டும். மாணவர்களுக்கேற்ப கற்பித்தல் இருக்கவேண்டும். மாணவர் களின் மனநிலையோடு இணைந்து சென்று கற்பிக்க வேண்டும். கல்வித் துறையில் மாற்றத்தினை ஏற்படுத்தி னாலேயே ஏனைய எல்லாத்தையும் மாற்ற முடியுமென்ற நம்பிக்கை எனக்குள்ளது. அதனால் தான் கல்வித்துறையோடு கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றேன். -என்றார்.

## படகுடன்...

போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கேரள கஞ்சா கொண்டு வரப்பட்ட டிங்கி படகொன்றும் கடற்படையின ரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவையும் சந்தேகநபர்களையும் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## டிப்பரை...

இழந்து ரயில்வே பாதையுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் வாகனம் சேதமடைந்ததுடன் வாகனத்தின் சாரதி தப்பி ஓடியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றப்பட்டுள்ள நிலையில் அது கள்ள மணலாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வாள்வெட்டுக்கு...

இராணுவத்தினர் வழிமறித்தபோது ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மட்டுமே சிக்கியுள்ளனர். ஏனையவர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும், அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட வாளுடன் விசேட அதிரடி படை யினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

யாழ். இந்துக் கல்லூரி வீதி மற்றும் கல்வியங்காட்டு பகுதியைச் சேர்ந்தவர் களே கைது செய்யப்பட்டுள்ளனர் என இராணுவம் தெரிவித்துள்ளது.

## யாழ். புலனாய்வு...

யால் சுட்டு தற்கொலைசெய்து கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 7 மணியளவில் அம்பாறை மாவட்டம், கல்முனை பொலிஸ் நிலையத்திலுள்ள அரச புலனாய்வுப் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

யாழ். வடமராட்சி, கரணவாய் மத்தி பிரதேசத்தைச் சேர்ந்த கே.கமலராஜ் (வயது 21) என்ற அரச புலனாய்வு உத்தி யோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பகுதியில் அமைந்துள்ள தேசிய புலனாய்வுப் பிரிவு காரியாலயத் தில்கடமையாற்றிவரும்குறித்த உத்தியோ கத்தர், நேற்று மாலை 6.30 மணியளவில் காரியாலயத்தில் தனிமையில் இருந்துள்ள நிலையில், கடமைக்காக வழங்கப்பட்ட துப்பாக்கி மூலம் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

தற்கொலைக்கான காரணம் தெரியவராத நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை இடம்பெற்று வருகின்றது எனக் கல்முனைப் பொலி ஸார் தெரிவித்தனர்.

ஈழநாடு
Eelanadu ஊழநாடு
20.06.2020 சனிக்கிழமை

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**gmail:- eelanaduweekly@gmail.com**

**தொலைபேசி : 021 492 7805**

# தமிழ்த் தேசியத்தை பாதுகாப்பதற்கு

மாற்று அணியினரை தமிழ் மக்கள் தோற்டிக்க வேண்டும், அதனுடாக, தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதை இம்முறையும் தமிழ் மக்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும். இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். சம்பந்தன் பொதுவாக மாற்று அணியென்று அழுத்திக் கூறுவது, உண்மையில், விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணி மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றைத்தான்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது, கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் பெரும் சரிவு ஏற்பட்டிருந்தது. இதனை தேர்தல் முறையிலுள்ள பிரச்னை என்று கூறிவிட முடியாது. மக்கள் தமது ஆதரவை தெரிவிப்பதற்கு தேர்தல் முறைமை ஒரு தடையில்லை. இந்த பின்புலத்தில் சிந்தித்தால், கூட்டமைப்பின் வழமையான வாக்கு வங்கியில் ஒரு சரிவு ஏற்பட்டிருப்பது உண்மையே. கூட்டமைப்பினர் மத்தியில் இது தொடர்பில் அச்சம் தொற்றியிருக்கலாம். இதன் காரணமாகவே சம்பந்தன் மாற்று அணிகளை, மக்கள் தோற்கடிக்க வேண்டுமென்று கூறுகின்றார் போலும். தமிழ் மக்கள், உண்மையிலேயே கூட்டமைப்பின் மீது மட்டும்தான் விசுவாசம் கொண்டிருப்பதாக, சம்பந்தன் நம்பியிருந்தால், இவ்வாறானதொரு அறிக்கை அவசியப்பட்டிருக்காது.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் ஒரு நம்பிக்கை நீண்டகாலமாக இருந்துவருகின்றது. அதாவது, அனைவரும் ஓரணியில் நிற்க வேண்டும். அதன் மூலம்தான் தமிழ் மக்களின் பலத்தை நிரூபிக்க முடியும். தேர்தல் காலத்தில் இது மிகவும் இனிப்பான வார்த்தைகளாக இருந்தாலும் கூட, நடைமுறையில் இதன் பெறுமதி மிகவும் பலவீனமாகவே இருக்கின்றது. மேலும், தமிழ்த் தேசிய அரசியல் நோக்கில் இது ஆபத்தானதும் கூட. ஏனெனில் ஒரணியில் நிற்பவர்கள் அனைவரும் ஓரணியாக தவறு செய்தால் அல்லது, தவறான பாதையில் பயணித்தால், தமிழ்த் தேசியம் அதன் உயிர்ப்பை இழந்துவிடலாம். ஆனால் தமிழ்த் தேசிய அரசியல் சக்திகள் நாடாளுமன்றத்தில் இரண்டு அணிகளாக இருந்தால், ஒருவரை ஒருவர் கண்காணித்து கட்டுப்படுத்த முடியும். கடந்த பத்து வருட கால தமிழ் நாடாளுமன்ற அரசியலில் அவ்வாறானதொரு நிலைமை இருந்திருக்கவில்லை. இதன் காரணமாகவே பல்வேறு குழப்பங்கள் இடம்பெற்றன.

2009இற்கு பின்னர் இடம்பெற்ற இரண்டு நாடாளுமன்ற தேர்தல்களின் போதும், தமிழ் மக்கள் தமது ஏகோபித்த ஆதரவை கூட்டமைப்புக்குத்தான் வழங்கியிருந்தனர். ஆனால் அதன் ஊடாக தமிழ்த் தேசிய அரசியல் பலவீனமடைவதை தடுக்க முடிந்ததா என்னும் கேள்விக்கு எவரிடம் பதிலுண்டு? ஆயுதப் போராட்டம் இடம்பெற்ற காலத்தில் மாற்றுத் தரப்புக்களின் தேவை சந்தேகத்துடன் நோக்கப்பட்டது. அதில் நியாயமிருந்தது. ஆனால் 2009இற்கு பின்னரான அரசியல் சூழல் முற்றிலும் வித்தியாசமானது. 2009இற்கு முன்னர் கூட்டமைப்பிற்கு கடிவாளமிடுவதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பு இருந்தது.

ஆனால் 2009இற்கு பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை பாதுகாப்பதற்கான கட்டமைப்பொன்று, தமிழ் மக்கள் மத்தியில் இருக்கவில்லை. கூட்டமைப்பு தவறு செய்தால் அதனை சரி செய்பவர்கள் யார் என்னும் கேள்வி எழுந்தது. இந்த அடிப்படையில்தான் மாற்று அணியினரின் தேவை உணரப்பட்டது. தமிழ்த் தேசிய மாற்று அணியென்பது, தமிழ்த் தேசிய அரசியலை உயிர்ப்பாக வைத்திருப்பதான ஒரு அரசியல் பொறிமுறையாகும். அதில் எவர் இருக்கின்றார்? - அங்கு இருப்பவர்கள் வல்லவர்களா? இப்படியான கேள்விகள் இங்கு முக்கியமில்லை. ஆனால் தமிழ்த் தேசிய அரசியல், அதன் உயிர்ப்பை இழந்துவிடாமல் இருக்க வேண்டுமாயின், ஒவ்வொரு குறிப்பிட்ட சூழலிலும், சமநிலைப்படுத்தும் தமிழ்த் தேசிய சக்திகள் தமிழ் மக்கள் மத்தியில் உருவாக வேண்டியது அவசியம். ஒன்றின் மீது, மற்றொன்று அழுத்தங்களை பிரயோகிப்பதன் ஊடாக, இரண்டும் சரியான வழியில் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அந்த நிர்ப்பந்தமே தமிழ்த் தேசியத்தை பாதுகாக்கும்.

# மஹிந்தானந்தவின் குற்றச்சாட்டு உடனடி விசாரணைக்கு உத்தரவு!

*கொழும்பு, ஜூன் 20*

*2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் போது, இந்திய அணிக்கு இலங்கை அணி, பணத்துக்கு வெற்றியைத் தாரை வார்த்தாக கூறப்பட்ட குற்றசாட்டு தொடர்பாக, பக்கச்சார்பற்ற விசாரணைக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும உத்தரவிட்டுள்ளார்.*

*முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமமே நேற்று முன் தினம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.*

*அவரது கருத்துக்கு, இலங்கை அணியின் முன்னாள் தலைவர்களான மஹேல ஜயவர்த்தன, குமார் சங்கக்கார உள்ளிட்ட முன்னாள் கிரிக்கெட் பிரபலங்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருப்பதுடன், குற்றச்சாட்டுக்கான ஆதாரத்தை வெளியிடவேண்டும் என்றும் கூறியுள்ளனர்.*

*இந்தநிலையில், விளையாட்டுத்துறை அமைச்சர் டளஸ் அழப்பெருமவின் உத்தரவின் பேரில், விளையாட்டுத் துறை அமைச்சில் அமைக்கப்பட்டுள்ள விசேட பிரிவின் ஊடாக, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் கே.டீ.எஸ்.ருவான்சந்ர தெரிவித்துள்ளார்.*

*இந்த விசாரணைப் பிரிவில் பொலிஸ் அதிகாரிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். எதிர்வரும் நாட்களில் இந்தக் குழுவினால் முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமமேயிடம் வாக்குமூலம் பெறப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.*

# கொரோனா இரண்டாம்அலை எந்த நேரத்திலும் உருவாகலாம்!

## அனில் ஜாசிங்க எச்சரிக்கை

*சுகாதார வழிகாட்டுமுறைகளைப் பின்பற்றாவிட்டால், எந்த நேரத்திலும், எந்தநாட்டிலும் கொரோனா தொற்றின் இரண்டாவது அலை உருவாகலாம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*இலங்கையில் சிறியளவானோர், வைரசினால் ஏற்படக்கூடிய ஆபத்தை அலட்சியம் செய்கின்றனர். இலங்கை இரண்டாவதுஅலையின் தாக்கத்தில் இருந்து தப்பிக்கவேண்டும் என்றால், உலக சுகாதார நிறுவனம், வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிகளை பின்பற்ற வேண்டியது முக்கியம்.*

*இலங்கை கொரோனா வைரஸ் பரவுதலை ஆரம்பக் கட்டத்திலேயே முறியடித்துவிட்டது. எனினும் எந்த நேரத்திலும் எந்த நாட்டிலும் இரண்டாவது அலை ஆபத்து தலைதூக்கலாம். விமான நிலையங்களைத் திறக்கும்போது நாம் மிகவும், எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.*

*எந்த நடவடிக்கையும் 100 சதவீதம் பாதுகாப்பானது அல்ல என்பதால், பொதுமக்களின் நடத்தை முக்கியமானது. கொரோனா வைரஸ் குடியேறவும் பரவவும் நாம் அனுமதிக்க முடியாது. இரண்டாவது அலைகளைத் தடுக்க இதுவே ஒரே வழியாகும்.*

*தற்போது, கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் மையங்களுக்குள்ளேயும், கடற்படை முகாமுக்கு உள்ளேயும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது-என்றார்.*

# திருநெல்வேலியில் சட்டவிரோத கட்டடம் இடித்தழிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு

*யாழ்ப்பாணம், ஜூன் 20*

*நல்லூர் பிரதேச சபையின் அனுமதி பெறாமல் அதன் எல்லைக்குள் அமைக்கப்பட்ட சட்டவிரோதக் கட்டடத்தை இடித்தழிக்குமாறு நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு அமைய எதிர்வரும் திங்கட்கிழமை குறித்த கட்டடம் இடிக்கப்படவுள்ளதாக சபையின் தவிசாளர் தியாகமூர்த்தி தெரிவித்தார்.*

*இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,*

*யாழ்ப்பாணம் - நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் உள்ள அரசடி வீதி திருநெல்வேலி கிழக்கு பகுதியில் சபையின் எவ்வித அனுமதியும் பெறப்படாது கட்டடம் ஒன்று கட்டப்பட்டது.*

*குறித்த கட்டடத்திற்கு உரிய அனுமதியை எடுக்குமாறு சபையினால் பலமுறை அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. எனினும் குறித்த கட்டட உரிமையாளர் சபையிடம் இருந்து எவ்வித அனுமதியும் பெறாமல் கட்டடத்தை கட்டியுள்ளார்.*

*நல்லூர் பிரதேச சபையால் கடந்த வருடம் குறித்த கட்டடத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த நிலையில் சட்ட விரோதமாக சபையின் அனுமதி இன்றி கட்டப்பட்ட குறித்த கட்டடத்தினை இடித்து அளிக்குமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது.*

# தாக்குதலாளிகளுக்கு போக்குவரத்து ஒழுங்கு செய்தார் ரிஷாட் சகோதரர்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

*கொழும்பு, ஜூன் 20*

*முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் சகோதரர் மொஹமட் ரியாஜ் உயிர்த்த ஞாயிறு தாக்கு தல் சம்பவத்துடன் தொடர்புடைய குண்டுதாரிகளுடன் நேரடி தொடர்பு வைத்திருந்தார் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஜாலிய சேனரத்ன தெரிவித்துள்ளார்.*

*கொழும்பில் இருந்து ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி ஒன்றின் விசேட நிகழ்வில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்விடயத்தை உறுதிப் படுத்தியுள்ளார்.*

*விசாரணைகள் ஊடாக குறித்த விடயங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். குறித்த நபர் குண்டுதாரிகளுக்கு போக்குவரத்து வசதிகளை மேற்கொண்டுள்ளதாகவும் விசாரணைகள் ஊடாக தெரிய வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*மொஹமட் ரியாஜ் தற்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

செய்திகள்

# மணற்காட்டில் தனியார் மணல் அகழ நீதிமன்றத் தடையுள்ளது

## நடவடிக்கை எடுப்பேன் என உறுதி கூறினார் சுமந்திரன்

பருத்தித்துறை, ஜூன் 20

மணற்காட்டில் மணல் அகழ்வதற்கு தனியார் மணல் அகழ்வுக்கு அனுமதிக்க முடியாது என்று யாழ். மாவட்ட செயலராக க.கணேஸ் இருந்த போது தொடரப்பட்ட வழக்கில் நீதிமன்றத் தீர்ப்பு உள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு நாம் நடவடிக்கையில் இறங்குவோம் என்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மத்தியில் உறுதி கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

மேலும், மணற்காடு கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் பாரவூர்தி சங்கம் ஆகியவற்றை ஒன்றாக சந்தித்து இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்றும் கூறினார்.



வடமராட்சி கிழக்கு மணற்காடு பகுதியில் தனியாருக்கு மணல் அகழ்வு அனுமதி வழங்கப்பட்டதை கண்டித்து நேற்றுக் காலை மீண்டும் பொதுமக்கள் கூடி எதிர்ப்பு தெரிவித்த நிலையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தலையிட்டார்.

பிரதேச மக்களுக்கு மணல் அகழ்வுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். என்ற கட்டுப்பாடை மீறி தனியாருக்கு மணல் அகழ்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இதனை எதிர்த்து கடந்த சில நாட்களுக்கு முன்னர் பிரதேச மக்கள் எதிர்ப்பு போராட்டம் நடத்தியிருந்தனர்.

இந்நிலையில் பொலிஸார் தலையிட்டதன் அடிப்படையில் 2 நாள் அவகாசம் வழங்கி மக்கள் போராட்டத்தை நிறுத்தியிருந்தனர். அவகாசம் நேற்றுடன் முடிந்ததைத் தொடர்ந்து மக்கள் பெருமளவில் கூடி மணல் அகழ்வை எதிர்த்து போராட்டம் நடத்தினர்.

போராட்ட இடத்திற்கு வந்த எம்.ஏ.சுமந்திரன் மற்றும் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் ஆகியோர் மக்களுடன் கலந்துரையாடினர்.

இதையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் யாழ். மாவட்ட செயலர் மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் ஆகியோரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட நிலையில் அவர்கள் தமக்கு எதுவும் தெரியாது எனத் தெரிவித்தனர். இதையடுத்தே முன்னைய நீதிமன்றத் தீர்ப்பை அடிப்படையாக வைத்து நடவடிக்கை எடுக்க சுமந்திரன் உறுதியளித்தார்.

இதேவேளை, 480 கியூப் மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில் 800 கியூப் மணல் அகழப்பட்டமையை கண்டுபிடித்த பொலிஸார் மணல் அகழ்வைத் தற்காலிகமாகத் தடை செய்துள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் 5,71,848 பேர் வாக்களிக்க தகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 5 லட்சத்து 71 ஆயிரத்து 848 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என்று மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அமல் ராஜ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இம்முறை தேர்தலில் மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வாக்களிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த வருடம் 5 லட்சத்து 64 ஆயிரத்து 714 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர். இந்நிலையில் இம்முறை 5 லட்சத்து 71 ஆயிரத்து 848 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

வாக்காளர்களுக்கான வாக்காளர் அடையாளஅட்டைகள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அவை தபால் திணைக்களம் ஊடாக வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன - என்றார்.

# எந்த அரசாங்கத்துக்கும் ஆதரவு அளிக்கமாட்டோம்

## இப்படி சொல்கிறார் சிவமோகன்



வவுனியா, ஜூன் 21

எமது கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு எந்த ஓர் அரசுக்கும் நாங்கள் ஆதரவு வழங்கமாட்டோம் என முன்னாள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

வவுனியா கிடாச்சூரி கண்ணகை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாடுகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இம்முறை தேர்தலில் பேரினவாதிகளுக்கு பின்னால் நிற்பவர்களுக்கு வாக்களித்தால் மக்கள் உருக்குலைந்து போகும் நிலை ஏற்படும். இந்த தேர்தலானது தமிழ் மக்களின் இருப்பை உறுதிசெய்வதற்கான தேர்தலாகும். அண்மையில் நடந்த தேர்தலில் கோட்டாபய வெற்றி பெற்றதன் பின் இராணுவ அதிகாரிகளை வைத்துக்கொண்டு ஒரு அடக்குமுறை செயற்பாட்டை செய்துவருகின்றார். இவர்கள் நாடாளுமன்ற சட்டம் எதனையும் மதிக்கவில்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

வவுனியா மாவட்டத்தில் பல்வேறு ஊடுருவல் நடக்கின்றது. தற்போது வவுனியா மாவட்டத்திற்கு ஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் தேவை. அதற்காகதான் பேரினவாதிகளின் பின்னால் கேட்பவர்களும், அவர்களுக்கு சார்பாக சுயேச்சைக் குழுவாகத் தேர்தலில் நிற்பவர்களும் பாடுபடுகிறார்கள்.

எமக்கு ஒரு சிங்கள வாக்கோ முஸ்லிம் வாக்கோ கிடைப்பதில்லை. எமது தமிழ் மக்கள் இதனை நன்கு புரிந்துக்கொண்டு வாக்களிப்பார்கள். நிச்சயமாக நாம் இம்முறை ஒரு பெரிய வெற்றியை பெறுவோம்.

எமது கொள்களை குழிதோண்டி புதைத்துவிட்டு எந்த ஒரு அரசுக்கும் நாங்கள் ஆதரவு வழங்கமாட்டோம். எமது உரிமைகளை மக்களின் வாழ்வாதார விடயங்களை விட்டுக்கொடுக்காமல் இருந்துகொண்டு தான் எவருக்குமான ஆதரவினையும் கொடுக்கமுடியும் - என்றார்.

# கூட்டமைப்பில் இருந்துகொண்டே அதை சிலர் பலவீனப்படுத்துகின்றனர்

## செல்வம் அடைக்கலநாதன் சாடல்



மன்னார், ஜூன் 21

தமிழ் தேசியக்கூட்டமைப்பிற்குள் இருந்து கொண்டு ஒரு சிலர் அதனைப் பலவீனப்படுத்தும், நம்பிக்கையற்ற செயற்பாட்டை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். மக்களாகிய நீங்கள் யாரை தெரிவு செய்ய வேண்டும்? யாரை தெரிவு செய்யக் கூடாது என்ற தீர்மானத்தை எடுப்பது உங்கள் கைகளில் உள்ளது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

- மன்னாரில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்று அவர் நடத் திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

-அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் தேசியக்கூட்டமைப்பு நிச்சயமாக கூடுதலான ஆசனங்களை பெற்றுக்கொள்ளும். அதில் எந்த சந்தேகமும் இல்லை. இன்று சுமார் 400 இற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். குறித்த வேட்பாளர்கள் சுயேட்சைக் குழுக்களிலும், அரசாங்கத்தோடு மறைமுகமாக சொந்தம் கொண்டாடுகின்றவர்களும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஒரு சூழ்ச்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்தும் ஒரு செயற்பாடாகவே இந்த சுயேட்சைக் குழுக்கள் மற்றும் மறைமுகமாக அரசாங்கத்தோடு செயல்படுகின்றவர்கள் போட்டியிடக் காரணமாக உள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பலத்தை பலவீனப்படுத்தும் வகையில் குறித்த நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளது.

இன்று கொரோனா வைரசை சாட்டாக வைத்து வடக்கு கிழக்கில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் தென் பகுதியில் இவ்வாறான சோதனைச் சாவடிகள் இல்லை. சிங்கள மக்கள் மத்தியில் வாக்குகளை பெற்றுக்கொள்ளும் வகையில் இனத் துவேச அடிப்படையில் அடக்குமுறையை கொண்டு வரும் சூழலை உருவாக்கி உள்ளனர்.

- இதனை சுயேட்சைக்குழுக்கள் மற்றும் அரசாங்கத்தோடு மறைமுகமாக சொந்தம் கொண்டாடுகின்றவர்கள் தேர்தல் காலங்களில் முற்றாக நீக்கிவிட உங்களினால் முடியுமா?

- புதிய ஜனாதிபதியாக வந்துள்ள கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் தற்போதைய பிரதமர் ஆகியோர் எங்களுடைய மக்கள் சார்ந்த பிரச்னைகளில் எந்த ஒரு அக்கறையினையும் காட்டாதவர்களாகத்தான் இருந்து கொண்டு இருக்கின்றார்கள் என்பதனை குறிப்பிட விரும்புகின்றேன்.

அரசாங்கத்திற்கு 3/2 பெரும்பான்மையை வழங்க தயார் என ஒரு சிலரால் கூறப்படுகின்ற போதும் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள தயார் இல்லை. வருகின்ற அரசாங்கம் எங்களுடைய மக்களுக்கு எதனையும் செய்து தராது என்பதை எங்களால் உணர்த்த முடியும். எங்கள் பக்கம் இருக்கின்ற நியாயத்தை சர்வதேசம் உடனடியாக செய்வதற்கான நடவடிக்கைகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் - என்றார்.

மட்டுநேசன்

# நான் கிரிக்கெட் ஆடியமை ராஜதந்திரம் — சுமந்திரன்

# எமது ஆயுதப் போராட்டம் ராஜதந்திரம் — ஜனநாயகப் போராளிகள்

தமிழர் அரசியலில் ராஜதந்திரம் என்பதற்கான விளக்கங்கள் தலையைச் சுற்ற வைக்கின்றன. ராஜதந்திரத்தின் குருவான சாணக்கியன் இன்று உயிருடன் இருந்திருந்தால் ஒட்டைச் சிரட்டைக்குள் தண்ணீர் விட்டு அதற்குள் குதித்து உயிரை மாய்த்திருப்பார்.

ஒரு பிள்ளை பிறந்ததில் இருந்தே வாய்பேசாமலிருந்தது. நீண்டகாலம் தவமிருந்து பெற்ற இந்தப் பிள்ளையின் வாயிலிருந்து என்றாவது ஒருநாள் அம்மா என்ற வார்த்தை வராதா என ஏங்கித் துடித்துக் கொண்டிருந்தாள் அன்னை. மீண்டும் ஆலயங்கள், தல விருட்சங்கள் எல்லாவற்றையும் சுற்றி வந்தாள். யார் யாரோ சொன்ன விரதங்கள் எல்லாவற்றையும் அனுஷ்டித்தாள். நம்பிக்கையை மட்டும் அவள் கைவிடவில்லை.

ஒருநாள் காலை "அம்மா" என்ற குரல் கேட்டது. அந்தச் சொல் அவளுக்குத் தேனாக இனித்தது. சுற்றுமுற்றும் பார்த்தாள். கனவல்ல நிஜம் என்பதைப் புரிந்துகொண்டாள். ஓடிப் போய் பிள்ளையை வாரியணைக்கத் துடித்தாள். தொடர்ந்தும் பிள்ளை பேசியது, "அம்மா நீ எப்போது தாலியறுப்பாய்?", இந்தக் கேள்வியைக் கேட்டதும் இடி விழுந்தது போலாகிவிட்டது.

கடவுளே! இதனைக் கேட்பதை விட இந்தப் பிள்ளை ஊமையாகவே இருந்திருந்தால் சஞ்சலமில்லாமல் இருந்திருப்பேனே என எண்ணினாள். இதனைப் போல ஒரு காட்சியை கடந்த செவ்வாய்க்கிழமை அன்று, வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்தின் தனிப்பட்ட அரசியல் அலுவலகத்தில் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கேட்கக்கூடியதாக இருந்தது.

புலிகளின் தலைவர் பிரபாகரனோ அவரின் தத்துவாசிரியரோ, திலீபனோ, தமிழ்ச்செல்வனோ, மாவட்டத் தளபதிகளோ பொறுப்பாளர்களோ மாவீரர் நாள் நினைவுகளிலோ - ஊடகவியலாளர் சந்திப்புக்களிலோ இதுவரை வெளியிட்டிருக்காத "அரிய உண்மை" என்று தான் கருதிய ஒன்றை அன்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் வெளிப்படுத்தியுள்ளார் ஜனநாயகப் போராளிகளின் கதிர். "நாம் ஆயுதம் ஏந்தியது அரசியல் தந்திரோபாயமே".

இதனை வாசித்த முன்னாள் போராளிகள் ஊமைப் பிள்ளை பேசாதா எனக் காத்திருந்து விட்டு பின்னர் தனது முடிவை மாற்றிக் கொண்ட அன்னையின் நிலையில் இருந்தனர். "இவங்களில் ஏதோ விஷயம் இருக்குது" என மனதில் நினைத்த பலரும் இடிந்து போய் நிற்கின்றனர்.



கதிர் - ஜனநாயகப் போராளிகள் கட்சி

"நான் அரசுத் தரப்பினருடன் கிரிக்கெட் விளையாடியது எனது ராஜதந்திரமே" என மகசின் ஜி.எச். வார்ட்டில் கைதிகளின் காதில் பூச்சுற்ற முனைந்த சுமந்திரன் சொன்னது போலவே ஜனநாயகப் போராளிகளின் பிரமுகர் கதிரின் விளக்கமும் அமைந்திருந்தது. "தமிழரசுக் கட்சியிலுள்ள சுமந்திரனுடன்கூட எமக்கு எவ்வித முரண்பாடுகளும் இல்லை. நாம் பங்காளிக் கட்சிகளாக இருந்ததில்லை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பக்கபலமாக இருப்போம்" எனவும் அவர் மொழிந்துள்ளார். "தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட ஒரேயொரு கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே", எனவும் அவர் நினைவுபடுத்தினார்.

இந்த விடயத்தைத் தமிழ் மக்கள் மறக்கவில்லை. அதுமட்டுமல்ல, சுயேச்சைக் குழுவாக ஜனநாயகப் பேராளிகள் 2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டதையும் மறக்கவில்லை. நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்து விட்டு வெளியில் வந்ததும், "சம்பந்தன் ஐயா கடலைக் கடை நடத்தத்தான் லாயக்கானவர்" என இக்குழுவின் பேச்சாளர் குறிப்பிட்டார். கூடவே இக்குழுவை ஒருங்கிணைத்தவரும், அதன் அப்போதைய தத்துவாசிரியர் போன்ற நிலையில் விளங்கியவருமான வித்தியாதரனும் நின்றிருந்தார். இக்காட்சியினை தொலைக்காட்சியொன்று ஒளிபரப்பியது. அப்போது அவரும் இதேநிலைப்பாட்டிலேயே இருந்திருக்க வேண்டும். இல்லையேல் இக்கருத்தைத் திருத்த முனைந்திருப்பார் அல்லது வருத்தம் தெரிவித்திருப்பார். எவ்வாறிருந்தாலும் தமிழ் மக்களின் மறதி மீது தாங்கள் எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதற்கு இச்சம்பவங்கள் நல்ல உதாரணங்களாகும். சரி இக்குழுவினர் கடலைக் கடையில் வறுவல் வேலை செய்யப் போகிறார்களா?

முன்னாள் போராளிகள் நாடாளுமன்றப் படிகளில் மிதிக்கத் தகுதியில்லாதவர்கள் என்ற நிலைப்பாட்டை 2009 இலிருந்து கூட்டமைப்பினர் செயலில் நிரூபிக்கின்றனர். அவர்களுக்கு உரிய இடம் சிறைதான் என்பதைத் தமது செயல் மூலம் உணர்த்துகின்றனர். தற்போது ஈ. பி. டி. பி.யைச் சேர்ந்த மு.றெமீடியஸ் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த ஜோய் மகாதேவன் ஆகியோரால் சில போராளிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். தமிழரசுக் கட்சியிலுள்ள தவராசாவின் முயற்சியினாலும் சில போராளிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனால், கைதிகள் விவகாரத்தைப் பொறுப்பேற்ற சுமந்திரனால் மட்டும் எந்த ஒரு முன்னாள் போராளியையும் இதுவரை விடுவிக்க முடியவில்லையே. "நான் கோட்டாபயவுடன் டின்னரில் கலந்து கொள்வதுண்டு. உங்களது விடுதலையை சாத்தியமாக்கிக் காட்டுவேன்", எனச் சூளுரைத்த சுமந்திரனால் மட்டும் எதுவும் சாத்தியமாகவில்லை என்பதற்கு என்ன காரணம் எனத் தெரியவில்லை. ஆனால், இவரது பெயரால் சுமார் 15 பேர் சிறைவாசிகளாகியுள்ளனர். ஜே.வி.பியினர் விடயத்தில் சுமந்திரனால் சாத்தியமாகக் கூடிய விடயங்கள் புலிகள் விடயத்தில் மட்டும் பலிக்கவில்லை போலவுள்ளது.



நாடாளுமன்றத் தேர்தலில் தாங்கள் போட்டியிட வேண்டும் என ஜனநாயகப் போராளிகள் வலியுறுத்தவில்லை. தாங்கள் செருப்புப் போன்றவர்கள் நாடாளுமன்றம் என்ன பூசையறைக்குள் போகத் 'தகுதியில்லாதவர்கள்' வெளியே நிறகத்தான் எனக் கருதுகிறார்கள் போல, நாம் அறிந்த வரையில் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் அனைவரும் புனர்வாழ்வு பெற்றவர்களே. எவரும் வழக்கை எதிர்கொண்டு விடுதலையாகவில்லை. ஆகையால், இவர்களுக்கு சில விடயங்கள் விளங்கவில்லைப் போல் உள்ளது. இவர்களுக்கு நெருக்கமான சுமந்திரனுக்கும் விளங்கவில்லை. அதனால்தான், "எமது குடும்பத்தினர் வறுமையில் வாடுகின்றனர். எம்மைப் பார்க்க வரக்கூட அவர்களால் முடியவில்லை. புலம்பெயர் நாடுகளில் உள்ள எமது உறவுகளுடன் தொடர்பு கொண்டு எமது குடும்பத்தினரின் வாழ்வாதாரத்துக்கு ஏற்பாடு செய்யுங்களேன்", என சுமந்திரனிடம் கெஞ்சினர் கைதிகள்.

அவரோ "முன்னர் புலிகள் இருந்தனர். கேட்டவுடன் பணம் கிடைக்கலாம். எமது கட்சியிலும் நிதியில்லை. தேர்தல் செலவுக்குக்கூடப் பணம் இல்லாமல் சிரமப் பட்டோம்" என அழாத குறையாகக் கூறினார். இதேகாலப் பகுதியில்தான் கட்சிக்கு கோடிக்கணக்கில் நிதி வழங்கினேன் என்று பின்னாளில் குகதாசன் வீரகேசரிக்கு அளித்த நேர்காணலை நாம் மறந்து விடுவோம்.

எவ்வாறிருந்தாலும் முன்னாள் போராளிகளை சிறையிலிருந்து மீட்டவர் என்ற வரலாறு சட்டத்தரணி தவராசாவுக்கு உண்டு. அவருக்கு முன்னாள் போராளிகள் நன்றிக் கடன்பட்டவர்கள். இதிலிருந்து ஜனநாயகப் போராளிகளும் விலகியிருக்க முடியாது. ஆகவே கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் முதல் இடம் தவராசாவுக்கு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை இக்கட்சியினர் எடுக்க வேண்டும். கூட்டமைப்புத் தலைமையிடம் இதனை வலியுத்த வேண்டும். கனடா வரவு குகதாசனுக்கும் சுமந்திரனுக்கு வேண்டப்பட்ட அம்பிகாவுக்கும் பின்னர்தான் தவராசாவின் பெயர் பற்றி சிந்திக்கப்படும் என்ற நிலைப்பாட்டை மாற்றவும் தாங்கள் செல்லாக் காசுகளல்ல என்பதை நிரூபிக்கவும் ஜனநாயகப் போராளிகள் முயல்வார்களா?

இன்னொரு விடயம் கரும்புலிகள் உட்பட மாவீரர்களின் பெற்றோரிடம் உங்கள் பிள்ளை எமது ராஜதந்திரப் போராட்டத்தில் பலியானார் என்று மறந்தும் சொல்லிவிடக்கூடாது.

செய்திகள்

## வெலிசற முகாம் இயங்க அனுமதி

கொழும்பு, ஜூன் 20

வெலிசற கடற்படை முகாம் மீண்டும் வழமை போல் இயங்க முடியும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க அறிவித்துள்ளார்.

உலகையே அச்சுறுத்தும் கொரோனா தொற்று இலங்கையிலும் பரவியுள்ளது. கொரோனா தொற்று சந்தேகநபர்களைப் பிடித்த கடற்படையினருக்கு தொற்று ஏற்பட்ட நிலையில், முகாமுக்குள் தொற்றும் ஏற்பட்டது.

கடற்படையினருக்குள் தீவிரமாகப் பரவிய தொற்றையடுத்து முகாம் மூடப்பட்டது. தற்போது தொற்றுப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டதால், மீளவும் வெலிசற முகாம் இயங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# மணல் ஏற்றும் அனுமதி விவகாரம் மணற்காட்டில் மறியல் போராட்டம்!

பருத்தித்துறை, ஜூன் 20

வடமராட்சி கிழக்கை சேர்ந்த பாரவூர்தி உரிமையாளர்களுக்கு மணல் அகழ்வு, விநியோகம் என்பவற்றுக்கு அனுமதிமறுக்கப்பட்டதால் அவர்கள் நேற்று போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

வடமராட்சி கிழக்கு - மணல்காட்டில் மணல் அகழ்வுக்கு அரசியல் கட்சி ஒன்று அனுமதி பெற்றது. இதையடுத்து, அந்தக் கட்சி பாரவூர்திகள் சங்கத்தின் சில பாரவூர்தி உரிமையாளர்களுக்கு மணல் அகழவும் - விநியோகம் செய்யவும் அனுமதி வழங்கியது. இதனால், உள்ளூரைச் சேர்ந்த 40 பாரவூர்தி உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

இதைச் சுட்டிக்காட்டி, தமக்கும் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று கடந்த புதன் கிழமை பாரவூர்தி உரிமையாளர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். தொடரும் மணல் அகழ்வு மற்றும் விநியோகம் என்பன தொடர்பில் தமக்குச் சாதகமான முடிவு கிடைக்க இரண்டு நாள் அவகாசத்தையும் வழங்கினர்.

அவர்களுக்கு சாதகமான பதில் கிடைக்காத நிலையில், மணலை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வதைத் தடுத்து நேற்று மறியல் போராட்டத்தை ஆரம்பித்தன.



## குப்பைகளை உணவாக உட்கொள்ளும் யானைகள்

### கழிவுகளால் உயிரிழக்கும் ஆபத்து



திருகோணமலை, ஜூன் 20

திருகோணமலையில் குப்பைகள் கொட்டுமிடத்தில் கூடும் 42 யானைகள் கழிவுகளை உணவாகக் கொள்ளும் பழக்கத்தைக் கொண்டுள்ளன என்று அப்பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை நகரத்தில் சேகரிக்கப்படும் கழிவுகள், பிரதேச சபைகளின் கீழ் சேகரிக்கப்படும் குப்பைகள், திருகோணமலை கடற்படை தளம், பிறமா மா ஆலை மற்றும் மிற்சுபி சிமெந்து நிறுவனங்களில் இருந்து இப்பகுதியில் குப்பைகள் கொட்டப்படுகின்றன.

32 ஏக்கர் நிலப்பரப்புடைய இந்த குப்பை கொட்டும் பிரதேசத்தில், நாளாந்தம் கொட்டப்படும் குப்பைகளை தரம்பிரிக்கும் நடைமுறை தற்போது பின்பற்றப்படுவதில்லை. உணவுக் கழிவுகளுடன் பிளாஸ்ரிக், பொலித்தீன் போன்ற தீங்கு விளைவிக்கும் பொருட்களும் கலந்துள்ளன.

உணவு தேடிவரும் யானைகள் இந்தக் கழிவுப் பொருட்களை உண்பதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளன. சுமார் 42 யானைகளைக் கொண்ட கூட்டம் இப்பகு திக்கு வந்து இவற்றை உணவா கக் கொள்கின்றன. இது அவற்றுக்கு பெரும் பாதிப்பை - அழிவை ஏற்படுத்தும் என்று சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது விடயத்தில் உரியவர்கள் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மட்டக்களப்பில் கடும் வறட்சி!

மட்டக்களப்பு, ஜூன் 20

மட்டக்களப்பு மாவட்டம் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. குளங்கள், ஏரிகள், நீரோடைகள் வற்றிவருகின்றன. இதனால் பல இடங்களில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வறட்சி காரணமாக, கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி, வவுணதீவு, செங்கலடி உட்பட பல பிரதேசங்களில் வேளாண்மை வயல் நிலங்கள் கருகிப்போய் காணப்படுகின்றன.

கால்நடைகளும் மேய்ச்சல் தரையின்றி, அலைந்து திரிவதையும் அவதானிக்க முடிகின்றது.

## திரையரங்குகளை திறக்க அனுமதி

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் உள்ள அனைத்துத் திரையரங்குகளையும் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் திறக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று அச்சத்தால் ஏற்படுத்தப்பட்ட பொதுமுடக்க காலத்தில் திரையரங்குகள் அனைத்தும் மூடப்பட்டன. நாடு இயல்பு நிலைக்கு திரும்பியபோதிலும் தொற்று அச்சம் காரணமாக திரையரங்குகளைத் திறக்க அனுமதி அளிக்கப்படவில்லை.

இந்நிலையில், எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் திரையரங்குகளைத் திறக்க கலாசார அலுவல்கள் அமைச்சு அனுமதியளித்துள்ளது. அத்துடன், முறையான சுகாதார வழிமுறைகளைப் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்றும் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

## 12,500 குடும்பங்களுக்கு 'சோலர்'

கொழும்பு, ஜூன் 20

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சூரிய சக்தி மின் உற்பத்தி (சோலர்) கருவிகளை இலவசமாக வழங்க மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாட்டில் குறைந்த வருமானம் பெறும் மின்சார வசதியில்லாத நிலையில் 12 ஆயிரத்து 500 குடும்பங்கள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அவுஸ்திரேலியாவிலிருந்து 98 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜூன் 20

கொரோனா தொற்றால் ஏற்பட்ட முடக்கத்தால் அவுஸ்திரேலியாவில் தங்கியிருந்த இலங்கையர்கள் 98 பேர் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஸ்ரீலங்கன் விமான சேவையின் விசேட விமானம் மூலம் மெல்பர்ன் நகரில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவர்களுள் அதிகமானவர்கள் அவுஸ்திரேலியாவில் உயர் கல்விக்காக சென்றவர்கள் என தெரிவிக்கப்பட்டுகின்றது.

இதேவேளை இந்திய கடற்படையினர் 58 பேர் சென்னையில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

காலி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கப்பல் ஒன்றில் பணியாற்றவே அவர்கள் அழைத்து வரப்பட்டனர்.

நாட்டுக்குள் வந்தவர்கள் அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் பரிசோதனை முடிவுகள் வரும் வரையில் அவர்கள் விமான நிலையத்திற்கு அருகில் உள்ள தற்காலிக விடுதி ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

## இரண்டு பசு மாடுகளை மோதித்தள்ளியது ரயில்

யாழ்ப்பாணம், ஜூன் 20

புகையிரதப் பாதையில் கடந்து சென்ற இரு பசு மாடுகளை ரயில் மோதித் தள்ளியதில் ஒரு மாடு ஸ்தலத்திலேயே உயிரிழந்தது. மற்றையது கடும் காயமடைந்தது.

யாழ். நகர் பெருமாள் கோவில் பகுதியில் - நாவலர் வீதிக்கு அண்மையாக நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்த மாடு கால்கள் உடைந்து நடக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற கால்நடை மருத்துவர்களான மாறன், பிரியந்தினி மற்றும் யாழ். மாநகர சபை உறுப்பினரான வ.பார்த்தீபன் ஆகியோர் அப்பகுதி மக்களுடன் இணைந்து பசு மாட்டை



மீட்டனர்.

தொடர்ந்து அந்த மாட்டுக்கு சிகிச்சை அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பாகம் – 20

தயாளன்

# கூட்டமைப்பின் உருவாக்கம் எப்படி நிகழ்ந்தது?

பேச்சுவார்த்தை நிறைவடைந்ததும் சீலனின் கையைப் பிடித்த குமார். "நீர் ஒரு இரும்பு மனிதன் " என்று பாராட்டினார். தங்களது தேவை நிறைவேற வேண்டுமென்பதற்காகப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கும் அரசியல்வாதிகளைத்தான் அதுவரை குமார் கண்டிருக்கிறார். அதிலிருந்து மாறுபட்டு நன்றி தெரிவித்துப் புலிகளின் இலச்சினையுடன் துண்டுப் பிரசுரம் வெளியிட மாட்டோம் என முகத்துக்கு எதிரே சொன்னதும் அவருக்குப் பிடித்திருந்தது. பின்னாளில் திட்டமிட்டபடி எம். ஜி. ஆர் உடனான சந்திப்புக்குப் பின்னரே கருணாநிதியுடனான சந்திப்பு என அறிவித்த பிரபாகரனின் வழி காட்டலில் வளந்தவரல்லவா சீலன்?

இந்தப் பேச்சு நடந்து கொண்டிருந்த போது பால் தேநீர் வந்தது. அதனைப் பருகுமாறு. வேண்டினார் குமார். அந்தக் காலத்தில் பெரும்பாலான புலிகள் உறுப்பினர்கள் தேநீர் பருகுவதில்லை. பருகக் கூடாதென்று எந்தக் கட்டுப்பாடுமில்லை. கடவுள் நம்பிக்கையும், தேநீர் பருகுவதும் ஒவ்வொருவரது சொந்த நிலைப்பாடு. இதில் ஒருவரது நிலைப்பாட்டை மற்றவர்கள் மாற்ற முயற்சிக்கக்கூடாது என்பது பிரபாகரனது கருத்து. தேநீர் எடுக்கப் புலிகள் தயங்குவதைக் கண்ட குமார் "என்னிடம் தேநீர் குடிக்கப் பயப்பிடுகிறீர்களா? வேண்டுமானால் நான் ஒரு தேநீரை உங்கள் முன் குடித்துக் காட்டுகிறேன்" என்று சொல்லித் தட்டிலிருந்த ஒரு குவளையை எடுத்துப் பருகினார்.

புலிகள் தன்னைச் சந்தேகிக்கிறார்களோ? இதற்குள் மயக்க மருந்தோ அல்லது வேறு ஏதோ போட்டிருக்கிறார்களோ என எண்ணுகிறார்களோ என்பது அவரது சந்தேகம். இந்தச் சங்கடத்தைத் தவிர்க்கத் தேநீரை எடுத்துப் பருகுமாறு ஏனையோருக்குப் பண்டிதர் கண்ஜாடை காட்டினார். பண்டிதரைத் தொடர்ந்து ஏனைய மூவரும் தேநீர் அருந்தினர். சில நாட்களின் பின்னரே குமாருக்குத் தெரிந்தது பெரும்பாலான புலிகள் உறுப்பினர்கள் தேநீர் அருந்துவதில்லை என்று. இயக்கம் தொடர்பான விடயங்களில் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்கும் புலிகள் தமது சொந்தப் பழக்க வழக்கங்களை மற்றவர்களுக்கு ஏற்றவாறு மாற்றத் தயாராக உள்ளனர் என்பதை அறிந்து வியந்து போனார். இத் தகவலை அந்நாளில் அவருக்கு நெருக்கமானவராக இருந்த ஒருவரே குறிப்பிட்டார்.

இப்பேச்சு நடந்ததற்கு அடுத்த நாள் குமாரின் அறிக்கை வெளியானது "காட்டிலும் மேட்டிலும், கல்லிலும் முள்ளிலும் துன்பப்பட்டுப் போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து இந்த உள்ளூராட்சி தேர்தலில் இருந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி விலகிக் கொள்கிறது" என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

யாழ். பிரதான வீதியில் அமைந்திருந்த காங்கிரஸ் பணிமனையில் தேநீர் குடித்ததும் ஒரு வகையில் நல்லதாகப் போயிற்று. தொடர்ந்து கூட்டணி வேட்பாளர்களைத் தனித்தோ அல்லது இருவராகச் சென்றோ அவர்களது வீட்டில் சந்தித்துப் போட்டியிலிருந்து விலகுமாறு வேண்டிக்கொண்டனர். புலிகள் போன எல்லா வீடுகளிலும் தேநீர் கிடைத்தது. நாங்கள் தேநீர் குடிப்பதில்லை என்றால் அவர்கள் அதற்கு வேறு மாதிரி அர்த்தம் கற்பித்திருக்கக் கூடும். சுமார் அரை மணி நேரத்துக்குக் குறையாமல் ஒவ்வொரு வேட்பாளர் வீட்டிலும் உரையாட வேண்டி இருந்தது .

இதனை விட போகும் போது வேட்பாளர்களின் மனைவியரிடம் "அக்கா ஒருக்கா உங்கட அவரிட்டைச் சொல்லுங்கோ- எலெக்சனில இருந்து விலகச்சொல்லி" என்று விடுத்த வேண்டுகோள் பெரும்பாலும் உடனடிப்பலனை அளித்தது.

**இயக்கங்களின் இணைப்புக்கு முதல் முயன்றவர் குமார் !**

இரண்டாவது சந்திப்பு தமிழகத்தில் நிகழ்ந்தது. 1984 ஆம் ஆண்டு முற்பகுதியில் தமிழ்க்குழுக்களை ஓரணியில் கொண்டுவர வேண்டுமெனக் குமார் நினைத்தார். இதற்கெனப் புலிகளோடு தொடர்புகொண்டார். அவரோடு பேச்சு நடத்த ரகு, கடவுள் ஆகியோர் சென்றனர். தனது நோக்கத்தைக் குமார் வெளியிட்டார். "உங்களது நோக்கம் உயர்வானது. எங்களின் வேண்டுகோளை ஏற்று நீங்கள் உள்ளூராட்சித் தேர்தலில் இருந்து விலகியமை தொடர்பாக எங்களின் தலைவர் தங்களை மதிக்கிறார். எனினும் யதார்த்தம் வேறு மாதிரி உள்ளது. களத்தில் நாங்கள் மட்டுமே நிற்கிறோம். கட்டளையிடுவது எப்போதும் ஒருவராகத்தான் இருக்க வேண்டும். அந்த வகையில் கட்டளையிடும் தரப்பின் தலைமையை மற்றவர்கள் எல்லோரும் ஏற்கத்தானே வேண்டும். களத்தில் நிற்பவர்கள் என்ற வகையில் இவ்வாறு கோர எமக்கு உரிமையுண்டு", எனக் கடவுளும் ரகுவும் தெரிவித்தனர்.


சீலன்


பரமதேவா

"இதை எப்படி மற்றவர்கள் ஏற்றுக்கொள்வார்கள ?" எனக் கேட்டார் குமார். பேச்சு அடுத்த கட்டத்துக்குச் செல்லவில்லை. புலிகளின் நிலைப்பாடு இப்படி இருந்ததால் குமார் வேறு இயக்கங்களைச் சந்தித்தாரா எனத் தெரியவில்லை. பெரும்பாலும் அவ்வாறான சந்திப்பு நிகழவில்லை என்றே கருதலாம். எனினும் 1985இல் ஈ.என்.எல்.எவ். என்ற பெயரில் புலிகள், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ் இயக்கங்கள் சிறிது காலம் இணைந்து செயற்பட்டன. ரெலோவுடனான மோதலைத் தொடர்ந்து ஈ.என்.எல்.எவ். இயங்க முடியாமற் போயிற்று.

1990 காலப்பகுதிகளில் புலிகளின் எதிர்பார்ப்புகள், தேவைகளுக்கு ஏற்றபடி கொழும்பில் சில பங்களிப்புகளை செய்திருந்தார் குமார் பொன்னம்பலம் .

**மனிதஉரிமை அமைப்புக்களுடன் சந்திப்பு!**

மூன்றாவது சந்திப்பு புலம்பெயர் நாடுகளில் நடைபெற்றது. அனைத்துலகப் பிரதிநிதிகள் மனோ, ரொமேஷ் ஆகியோருடன் நடந்த இச் சந்திப்புக்களில் கூட்டமைப்பின் உருவாக்கம் பற்றி அலசப்பட்டது. புலிகளின் எதிர்பார்ப்பு எதுவோ அதையே தான் பிரதிபலிக்கப்போவதாக அவர் தெரிவித்தார். தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த பல அறிக்கைகளை ஆதாரபூர்வமாக இவர் தயாரித்தார். ஐ.நா. மனித உரிமை சபையின் முன் நேரடியாகச் சமர்ப்பித்தார்.

பெல்ஜியம் தலைநகர் பிரசெல்ஸ் இயங்கும் ஐரோப்பிய பாராளுமன்றம், லண்டனில் உள்ள றோயல் நிறுவனம் மற்றும் உலகளாவிய மனித உரிமை அமைப்புக்களுக்கு நேரடியாகச் சென்று முறைப்பாடு தெரிவித்தார். தமிழ் மக்களுக்காகவும் தமிழ் தேசியத்துக்காகவும் இவர் ஆற்றிய பணிகள் போற்றத்தக்கவை .

இவரது படுகொலையை அமெரிக்க காங்கிரஸின் உறுப்பினர்கள் நால்வர் மற்றும் பிரிட்டிஷ் றோயல் நிறுவனத்தினர் ஐரோப்பிய பாராளுமன்றத்தினர் கண்டித்துள்ளனர். தமிழ் தேசியத்துக்கு ஆற்றிய பணிக்காகப் பிரபாகரன் இவருக்கு மாமனிதர் விருதினை வழங்கிக் கௌரவித்தார். இதற்கான ஆவணத்தை இவரது குடும்பத்தினரிடம் கையளித்தார். "விடுதலைக்காக எரிந்து வந்த ஒரு இலட்சியச் சுடர்" . எனப் பிரபாகரன் அதில் குறிப்பிட்டுள்ளார்.

• • •

ஈ.பி .ஆர். எல் எவ் இயக்கத்துக்கும் புலிகள் இயக்கத்துக்கும் ஏற்பட்ட முரண்பாடுகள் - உடன்பாடுகளைப் பற்றியும் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் அதன் பங்களிப்பு பற்றியும் அடுத்து நாம் கவனிப்போம்.

**கொள்ளையடிக்கையில் பிடிபட்ட டக்ளஸ் !**

ஈரோஸ் இயக்கம் மாணவர் அமைப்பொன்றை உருவாக்கி இருந்தது. அதன் பெயர் ஈழ மாணவர் பொதுமன்றம் (Guess) அதுவே பின்னர் தனித்து இயங்கி ஈ.பி.ஆர். எல்.எவ். ஆக மாற்றமடைந்தது. பத்மநாபா, டக்ளஸ் தேவானந்தா முதலானோர் இதில் அங்கம் வகித்தனர். திருக்கோயில் மக்கள் வங்கியைக் கொள்ளையடிக்க முயன்ற டக்ளசை அப்பகுதி மக்கள் பிடித்து அடித்து உதைத்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். 1983 வெலிக்கடைப் படுகொலைகளில் தப்பிய டக்ளஸ் ஏனைய அரசியல் கைதிகளுடன் மட்டக்களப்புச் சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டார்.

பரந்தனில் பெரிய சண்டியர் ராஜன். அந்த நினைப்பில் அவர் அங்குள்ள ஏனைய கைதிகள் முன்னிலையில் தான் ஒரு பெரிய ஆள் எனக் காட்ட முயற்சிப்பார். அவ்வேளை டக்ளஸ் "நீயும் பாங்க் அடிச்சனி: நானும் பாங்க் அடிச்சனான், நீயும் பிடிபட்டணி, நானும் பிடிபட்டனான். ஆனபடியால் இங்கே யாரும் பெரிசில்ல கொஞ்சம் அடங்கியிரு" என்று எச்சரிப்பார். கிளிநொச்சி மக்கள் வங்கியைக் கொள்ளையடித்த பின் கைதானவர் பரந்தன் ராஜன்.

கொமாண்டர் குன்சி டக்ளஸ் சிறையிலிருந்த போது குன்சி என்பவரே ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் கொமாண்டராக இருந்தவர். இவரது தலைமையில் அக்கரைப்பற்றுப் பொலிஸ் நிலையத் தாக்குதலுக்குத் திட்டமிடப்பட்டது. பொலிஸ் நிலையத்துக்கு வெளியில் நிலையெடுத்திருந்தனர் ஈ.பி.ஆர். எல்.எவ் வினர். " நீ போ நீ போ" என ஒருவர் மாறி ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தனரேயொழிய எவரும் முதல் அடியை எடுத்து வைக்கவில்லை. விடிய விடியப் படுத்திருந்தும் எதுவும் நடக்கவில்லை.

அந்த நேரம் ஒரு நாய் குரைத்தது " நாய் குலைச்சிட்டுது. அவங்கள் அலேர்ட்டாகி விடுவாங்கள்" என்று கூறி தமது ஹபடையணியைத்ஹ திரும்ப அழைத்துக்கொண்டு வந்துவிட்டார் குன்சி .

**முதல் அடியை எடுத்துவைத்த பனாகொடை!**

மட்டு. சிறையிலிருந்து தமிழ் அரசியல் கைதிகள் காப்பாற்றி அழைத்துச் செல்லப்பட்டமை. முக்கியத்துவம் வாய்ந்தது. இவர்களைத் திருப்பவும் தென்னிலங்கைச் சிறைச் சாலைக்கு மாற்றப்போவதாகச் சில கதைகள் நிலவின. சிலவேளை இது வதந்தியாகவும் இருந்திருக்கலாம். இதை அடுத்து பனாகொடை மகேஸ்வரன் தான் சிறையிலிருந்து தப்பப்போவதாக வும் தனக்கு இதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் பரமதேவாவிடம் வேண்டினார். மட்டக்களப்பைச் சேர்ந்த தீவிரவாத இளைஞர்களில் பரமதேவாவின் பெயரே முதலில் இருந்தது. அந்தவகையில் தமிழ் மக்களின் விடுதலையை நேசிக்கும் சக்திகளின் தொடர்புகள் அவருக்கு நிறைய இருக்கும் என்பது இவரது கணிப்பு. அது சரியானதுதான். இவர் பனாகொடை முகாமிலிருந்து தப்பிச் சென்றவர் என்ற வகையில் இவரது தந்தையான தம்பாப்பிள்ளை என்பதற்குப் பதிலாகத் தப்பிய முகாமின் பெயரே இவருக்கு அடைமொழியாயிற்று. பிரபலமான ஒரு விடயத்தைச் செய்தால் அது அவர்களது பெயருக்கு முன்னால் ஒட்டிக்கொள்வது வழக்கம்தானே.

**சித்தாவின் பங்களிப்பு !**

பார்வையாளர் நேரத்தில் தன்னைச் சந்திக்க வந்த சித்தாவிடம் இந்த விடயத்தைச் சொன்னார் பரம தேவா. இது தொடர்பாக வரதன் என்பவர் சித்தாவை வந்து சந்திப்பார் என்றும் கூறியிருந்தார். இம் முயற்சி வெற்றிபெற்றால் நிச்சயம் ஏனைய அரசியல் கைதிகளை தென்னிலங்கையில் உள்ள சிறைக்கு மாற்றப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

(நாளையும் வரும்)

கலாநிதி பிரதீப் பீரீஸ், சகீனா மொயீனுதீன், மாரிமுத்து கிருஷ்ணமூர்த்தி

# காயம்பட்ட ஜனநாயகத்திற்கு அதிகாரத்துவம் பரிகாரமல்ல!



கடந்த பல வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிப்பிராய ஆய்வுகளானவை நாட்டினது ஜனநாயகம் மற்றும் ஜனநாயக நிறுவனங்கள் தொடர்பில் பொதுமக்களின் அதிருப்தியானது அதிகரித்து செல்வதை வெளிப்படுத்தி வருகின்றன. உதாரணமாக, 2012ஆம் ஆண்டு சமூக விஞ்ஞானிகள் சங்கம் மேற்கொண்ட 'தென்னாசிய அரசுகளின் ஜனநாயகம்' தொடர்பான அபிப்பிராய ஆய்வில் நாட்டில் 24.4 வீதமான சிங்களவர்கள்வலிமையானஒருதலைவரை விரும்புகின்றனர் எனவும், 91.1 வீத மான சிங்களவர்கள் "சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலொன்றின் மூலம் தலைவரொருவர் தெரிவு செய்யப்படல் வேண்டும்" எனவும் குறிப்பிட்டனர்.

கடந்த இரு வருட காலப்பகுதியில் நல்லாட்சி அரசாங்கத்தின் மிகவும் குழப்பகரமான அரசாங்க பின்னணியில் வலிமையான ஒரு தலைவர் என்பதன் மீதான மக்களின் விருப்பானது தீவிரமடைந்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அபிப்பிராய ஆய்வுப் பிரி வான சோஷல் இன்டிகேட்டர், 2018 ஆம் ஆண்டு நடத்திய, 70 வருட சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையினது பெறுமதிகள் மற்றும் மனப்பான்மைகள் தொடர்பானஆய்வுமுடிவுகளில்சிங்களசமூகத்தைச் சேர்ந்த 52.1 வீதமானவர்கள் வலிமை யான ஒரு தலைவரின் ஆட்சியினை விரும்புவதாகவும், 52.7 வீதமானவர்கள் 'துறை சார் வல்லுனரின் ஆட்சியினை' விரும்புவதாகவும், 80.9 வீதமானவர்கள் "தேர்தலொன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட தலைவரின் ஆட்சியினை" விரும்புவதாகவும் தெரிவித்திருந்தனர். அதாவது, பெரும்பான்மை சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தேர்தலொன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட அதேசமயம் வலிமையான மற்றும் துறைசார் வல்லுனரான தலைவர் ஒருவரின் ஆட்சியை விரும்புவதை ஆய்வு முடிவுகள் தெளிவாக சுட்டிக் காட்டுகின்றன.

இது சிங்கப்பூர் மாதிரியான ஜனநாயகமாக அமைவதுடன் வலிமையான மற்றும் துறைசார் வல்லுநரான தலைவர் மீதான விருப்பமும் நாடாளுமன்றம் மற்றும் அரசியல் கட்சிகள் தொடர்பான பொதுமக்களின் நம்பிக்கை வீழ்ச்சியும் நேர்மாறாக இடைதொடர்புறுகின்றது. சோஷல் இன்டிகேட்டர் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட தொடர்ச்சியான அபிப்பிராய ஆய்வு முடிவுகளின்படி, சிங்கள சமூகத்தில் நாடாளுமன்றம் மற்றும் அரசியல்வாதிகள் தொடர்பான நம்பிக்கையின் அளவானது, 2011-2018 காலப்பகுதியில் சீராக குறைவடைந்து வந்துள்ளதுடன், இராணுவம் மீதான நம்பிக்கை தொடர்ந்து உயர்வாகவும் மற்றும் நிலையானதாகவும் இருந்து வருகின்றது.

இந்த அதிகாரத்துவ வடிவ ஜனநாயகத்திற்கான தற்போதைய தூண்டற்காரணிக்கு அதற்கேயுரிய அரசியல் இலாபம் உண்டு. புதிய உயர்குடி குழுமத்தைச் சேர்ந்த குழுவிலுள்ளவர்கள் அவ்வாறான அரசாங்க வடிவத்தினூடாக நன்மை பெறுகின்றனர். மறுபுறத்தில், புதிதாக உருவாகி வரும் இராணுவ வகுப்பினர் மூன்று தசாப்த யுத்தத்தின் விளைவாக குறிப்பிடத்தக்களவு செல்வம் மற்றும் அந்தஸ்தை அனுபவித்து வருகின்றனர். மறுபுறத்தில், நவ தாராண்மைவாத சேவையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமானது கடந்த முப்பது வருடமாக புதிய வகுப்பொன்றை உருவாக்கியுள்ளது. அவ் வகுப்பானது மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், மேலாண்மையாளர்கள் போன்ற தொழில் வல்லுநர்களையும் மற்றும் அதிகார வர்க்கத்தினரையும் உள்ளடக்கியது.

நாட்டில் செல்வம் மற்றும் அந்தஸ்து ஆகியவற்றைக் கொண்டு இவர்களும் ஒரு வகுப்பாக உருவாகியுள்ளனர். சுவாரஸ்சியமான விடயம் என்னவெனில், இவ் இரு குழுக்களும் ஒத்த இயல்புடைய சமூக மற்றும் கலாசார பின்புலங்களிலிருந்து வந்தவர்கள். அதாவது, பிரதானமாக சிங்கள - பௌத்த சமூகத்தைச் சேர்ந்த மற்றும் கொழும்பிற்கு வெளி பிரதேசத்தினராக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஆகவே, இப்புதிய வகுப்பினரில் பெரும்பான்மையானவர்கள் சிங்கள-பௌத்த இனத்துவ தேசியவாத அனுதாபம் கொண்டவர்களாவதுடன், நவதாராண்மைவாத பெறுமானங்களை கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

பிரதானமாக, 2010ஆம் ஆண்டு தொடங்கி இவ் புதிய உயர்குடியினர் தாம் அடைந்த புதிய செல்வம் மற்றும் அந்தஸ்து போன்றவற்றோடு மட்டும் திருப்தியடையாததுடன், வெளிப்படையாகவே அரசியல் அதிகாரத்தில் விருப்பம் கொண்டவரகளாக இருக்கின்றனர். வம்சாவளி மற்றும் அரசியல் ஆதரவு அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட வாக்காளர்களைக் கொண்ட பாராம்பரிய அரசியல்வாதிகளை போல் இராணுவ உயர்குடி மற்றும் தொழில் வல்லுனர்கள் ஆகிய இரு வகுப்பினரும் அவர்களுக்கான சொந்த வாக்காளர்களைக் கொண்டவர்கள் அல்ல. இவ்வாறான பின்புலத்தில் கோட்டபாய ராஜபக்ஷவினது அதிகாரத்துவ வடிவ ஜனநாயக கருத்து இவ் புதிய உயர்குடிகளுக்கு மிகப் பொருத்தமான ஒன்றாக பொருந்தியுள்ளது. ஏனெனில், அவர்களுக்கு போட்டிமிக்க நாடாளுமன்ற அரசியலை அடைவதற்கு ஒப்பீட்டளவில் இது இலகுவாக அமைகின்றது என்பதினாலாகும். இதனாலேயே பெரும்பான்மையான தொழில் வல்லுனர்கள், இராணுவம் மற்றும் அதிகாரவர்க்கத்தினர் அதிகாரத்துவ வடிவ ஜனநாயகமாக எமது சமூகத்தை நிலைமாற்றுவதற்கு ஜனாதிபதியுடன் அணி வகுத்து நிற்கின்றனர்.

ஜனாதிபதி, அவரது அரசியல் சகபாடிகள் போலன்றி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு முன்பிருந்தே அவர் தெரிவு செய்யப்பட்ட அரசாங்க வடிவம் தொடர்பில் மிகவும் வெளிப்படை தன்மை கொண்டவராகவே செயற்பட்டார். உண்மையில், இவ் நிபந்தனைகளின் பெயரிலேயே அவரது தேர்தல் தளமானது ஒழுங்கமைக்கப்பட்டதுடன் வளைந்து கொடுக்கத் தேவையற்ற அல்லது அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் நியமங்களையும் விதிகளையும்கைவிடுவதற்குதயங்காத 'வலிமையான தலைவர்' என்ற தேவைப்பாட்டினை முன்னிறுத்தியே செயற்பட்டார்.

இந்த நிறைவேற்று ஜனாதிபதி பாரம்பரிய அரசியல் கட்சி ஒழுங்கமைப்புகளுக்கு வெளியிலான ஒரு வகையில் அதிகாரத்திற்கு வந்ததுடன், உண்மையில் இலங்கைக்கு அதிகாரத்துவ வடிவ ஆட்சியொன்று தேவையென்ற நம்பிக்கையுடையவராகவும், மக்களின் ஆட்சிமுறை தொடர்பான எதிர்பார்ப்புக்களை சிறந்த முறையில் பூர்த்தி செய்கின்றவராகவும் இருக்கின்றார். அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு வழங்குதல் தொடர்பில் இராணுவம் மற்றும் தொழில்சார் வல்லுனர்கள் சிறந்த திறன்களைக் கொண்டுள்ளனர் என்ற அவரின் நம்பிக்கையானது அவருக்கு முன்னர் வெளிப்படையில் ஜனநாயக அரசாங்கங்கள் என்று கூறிக்கொண்ட அரசாங்கங்களின் மோசமான பதிவுகளால் நிரூபணமாக்கப்பட்டது. மேலும், கடந்த காலத்தை போலன்றி, இன்றைய சுதந்திர உலகில் அதிகளவான நாடுகளின் தலைவர்கள் வலதுசார் கருத்தியல்வாதங்கள் மீது ஆர்வமுடையவர்களாக இருப்பதினால், இலகுவான அதிகாரத்துவவாதத்தை நோக்கிய தள்ளுகை தொடர்பில் சர்வதேச சமூகத்திடமிருந்து பெரியளவில் விமர்சனம் எதுவும் வரப்போவதில்லை. தற்போதைய கொவிட்-19 தொற்றுகை ஆட்சிலுள்ள அரசாங்கத்திற்கு அதிகாரத்துவ வடிவ அரசாங்கத்தினை கொண்டு செல்வதனை இலகுவாக்கியுள்ளது.

ஜனநாயகம் தொடர்பில் அநேகமான கட்டுக்கதைகள் புனையப்பட்டுள்ளது போலவே, அதிகாரத்துவவாதத்தை பிரச்சாரம் செய்யவும் நியாயப்படுத்தவும் அநேகமான கட்டுக் கதைகள் உள்ளன. தேசியவாதத்தினைப் போன்று அதிகாரத்துவவாதமும் அச்சத்தை அடிப்படையாகக் கொண்டே வளர்கிறது. அதிகாரத்துவ ஆட்சி பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்றது என்பதாக மக்களை நம்பச் செய்கின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன், சிங்கள தேசியவாத அரசியல்வாதிகளின் ஜனநாயக அரசாங்கம் மீதான வசைப்பாடல் ஆரம்பமானதுடன், உறுதியான இராணுவ ஆட்சிக்கான ஆதரவும் ஆரம்பமானது. உண்மையில், நிகழ்கால உலக அரசியலில், அதிகாரத்துவ அரசுகளுக்கும் தீவிரவாத தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்கான திறன் இல்லை என்பதற்கு போதுமானளவு ஆதாரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சீனாவின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் சிங்கப்பூரின் ஈர்க்கக்கூடிய அபிவிருத்தி போன்றன அதிகாரத்துவ வடிவ ஆட்சிக்கு பிரபல்யமான சார்புநிலையை வழங்கக்கூடிய விடயங்களாகும். 1980 களில்ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவும் பொது மக்கள் ஆதரவினை பெற்றுக் கொள்வதற்கு இலங்கையின் சிங்கபூர் ஆகும் கனவை நிறைவேற்றுவதாக வாக்குறுதியளித்ததுடன், ஆட்சியை அதிகாரத்துவ வடிவ ஆட்சியாக மாற்றியமைத்தார். இன்று தற்போதைய ஆட்சியாளர்கள் அதிகாரத்துவ இலட்சியத்தினை நியாயப்படுத்துவதற்கு அதே மந்திரத்தை ஓதுவதை நாம் கேட்கின்றோம்.

அபிவிருத்தித் திட்டங்களை இலகுவாகவும், ஒழுங்கானதாகவும் செயற்படுத்துவதற்கு அதிகாரத்துவ ஆட்சி சில சந்தர்ப்பங்களில் உதவும் என்பது உண்மையாகும். அவ்வாறான ஆட்சியில் கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்றவற்றிற்கு பெரும்பான்மை விருப்பு அல்லது பல குழுக்களின் ஆலோசனை என்பது தேவையற்ற ஒன்றாகும். எவ்வாறாயினும், பொறுப்புக்கூறலுக்கு கட்டுப்படாத அபிவிருத்தித் திட்டங்கள் பாரிய ஊழல் மற்றும் தகுதியடிப்படை இன்றி தாம் தீர்மானிப்பவருக்கு சலுகைக்கே வழங்கும் நிலைமைக்கு இட்டுச் செல்லும். தாராண்மைவாத ஜனநாயகத்தில் குறைந்தபட்சம் ஊடகம் மற்றும் ஏனைய ஆர்வக் குழுக்கள் ஆட்சியாளர்களின் ஊழலை வெளிப்படுத்துவதுடன், தவறான செயல்களுக்கு எதிராக மக்கள் போராட்டம் செய்யவும் முடியும். அதிகாரத்துவவாதத்தின் கீழ் பாரியளவான ஊழல்மூலம் சிறிய குழுக்கள் நன்மையடைவதுடன் முறையற்ற அரசாங்கத்திற்கு எதிராக சமாதான வழிமுறைகளை கையாளவும் முடியாது போகும். ஆக, அதிகாரத்துவ ஆட்சி அபிவிருத்தியினை உறுதிப்படுத்தும் என்பது நிச்சயமற்றதாகும்.

சிவில் விவகாரங்களை கவனிப்பதற்கு இராணுவ உத்தியோகஸ்தர்களை நியமிப்பதினால் ஒழுக்கம் மற்றும் சமூக ஒழுங்கு முறையினை பேணலாம் என்று கூறப்படுகின்ற மற்றுமொரு கட்டுக்கதையாகும். அண்மையில்நியமிக்கப்பட்ட ஜனாதிபதி பணிக்குழுவில் அதிகமான இராணுவ உத்தியோகஸ்தர்கள் உள்ளடங்கியிருக்கின்றனர். அவர்கள் நடைமுறைப்படுத்த முயலும் ஒழுக்கம், ஒழுங்கு மற்றும் நல்லொழுக்கம் என்பன ஆழமான விமர்சன பகுப்பாய்வுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது. ஒரு எடுத்துக்காட்டாக ஆறுமுகம் தொண்டமானின் இறுதிச் சடங்கை எடுத்துக் கொண்டால், இது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் ஒரு சீர்தன்மை, ஒழுக்கம் மற்றும் ஒழுங்கு என்பதாக அடையாளப்படுத்தப்படும் விடயத்திற்கு மாறாக இருக்கும் விதிவிலக்குகளில் தெளிவாக வெளியில் தெரியும் ஒன்று.

இலங்கையின் ஜனநாயக பின்னடைவுகளுக்கு பரிகாரமாக அதிகாரத்துவ வடிவ ஆட்சியை விரும்புவதானது சமூக பகுத்தறிவு தொடர்பான முதிர்ச்சியின்மை மற்றும் புராதன பழங்குடியினராகும் நாட்டம் மட்டுமே ஆகும். ஜனநாயகம் என்பது பரிபூரணமானது அல்ல என்பதை நாம்அனைவரும்அறிவோம். உண்மையில், ஜனநாயகம் நாட்டினை யுத்தங்களுக்கு இட்டுச் சென்றது, வினைத்திறனற்ற மற்றும் ஊழல் மிகுந்த தலைவர்களை உருவாக்குகின்றது, மற்றும் கோமாளிகள் ஆட்சி செய்ய வழிவகுத்தது. எனினும், ஆளப்படுபவர்கள் ஆட்சியாளர்களை அமைதியான முறையில் பதவியில் இருந்து நீக்குவதற்கு இயலுமான ஒரே முறைமை ஜனநாயகமே ஆகும். ஆகவே, காயப்பட்ட நாட்டின் ஜனநாயகத்திற்கான பரிகாரம் அதனை அதிகாரத்துவ வடிவ ஆட்சியாக மாற்றுவது அல்ல, மாறாக பிரஜை மற்றும் அரசுக்கு இடையிலான ஒப்பந்தத்தினை மீள்சமரசம் செய்து, பிரஜைகளின் தீவிர பங்குபற்றலை ஊக்குவிப்பதே.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.06.2020 அன்று வெளியிடப்பட்டது.